بسم الله الرحمن الرحيم

# ملخص حُقوق دعت إليها الفطرة وقرّرتها الشريعة باللغة العربية

## لابن عثيمين (رحمه الله)

நூல்

மனிதனின் உள்ளுணர்வு உணரக்கூடிய, இஸ்லாமிய சன் மார்க்கம் வலியுறுத்துகின்ற உரிமைகளும் கடமைகளும் எனும் நூலின் சுருக்கம்.

**ஆசிரியர்; அஷ்ஷெய்க் முஹம்மத் பின் சாலிஹ் அல் உதைமீன் (ரஹ்)**

1- حقُّ الله تعالى

أن تعبده وحده لا شريك له، وتكون عبدًا متذللا خاضعا له، ممتثلا لأمره، مجتنباً لنهيه، مصدِّقا بخبره، عقيدة مثلى، وإيمانٌ بالحق، وعمل صالح مثمر، عقيدة قوامها: المحبة والتعظيم، وثمرتها: الإخلاص والمثابرة.

## 1. அல்லாஹ்வுக்கு மனிதர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமை.

அதாவது அல்லாஹ்வை மாத்திரம் வணங்குதல், அவனுக்கு இணை கற்பிக்காதிருத்தல், அவனுக்கு அடிபணிந்து கட்டுப்படுகின்ற இறையடியானக இருத்தல், அவன் ஏவியதைக் கடைபிடித்தல், அவனால் தடுக்கப்பட்டதை தவிர்ந்து வாழுதல், அவன் சொல்லும் செய்திகளை உண்மைப்படுத்தல்.

இப்படிப்பட்ட நம்பிக்கையே அழகிய முன்மாதிரிமிக்கது, அதாவது உண்மையை ஏற்றுக் கொள்வது, பயன்மிக்க நல்லமல்களை நிறைவேற்றுவது.

இது எப்படியான நம்பிக்கை என்றால், அதனுடைய தூண்கள் இறையன்பும், அவனை மகத்துவப் படுத்துவதும். அதனுடைய பிரயோசனங்கள் இக்லாஸ் எனும் தூய எண்ணமும் விடாமுயற்சியுமாகும்.

2- حقّ رسول الله ﷺ

توقيره، واحترامه، وتعظيمه؛ التَّعظيم اللائق به، من غير غلوٍّ ولا تقصير.

وتصديقه فيما أخبر به من الأمور الماضية والمستقبَلة، وامتثال ما به أمر، واجتناب ما عنه نهى وزجر، والإيمان بأن هديه أكمل الهدي، والدفاع عن شريعته وهديه.

## 02. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமையும் உரிமையும்.

அவர்களை கண்ணியப்படுத்தல், மரியாதை செய்தல். அவர்களுடைய அந்தஸ்துக்கும் கண்ணியத்திற்கும் பொருத்தமான, அலட்சியமோ எல்லை மீறியோ போகாதவாறு கண்ணியத்தை வழங்குதல்.

மேலும் அவர்கள், கடந்தகால எதிர்கால சம்பவங்களாக கூறியவற்றை உண்மைப்படுத்தல்.

அவர்கள் ஏவியவற்றிற்கு கட்டுப்படல், அவர்கள் தடுத்தவற்றைத் தவிர்த்தல், அவர்கள் வழிகாட்டல் மிக முழுமையான வழிகாட்டல் என்றும் நம்புதல்.

மேலும் அவர்களுடைய மார்க்கத்தைப் பாதுகாத்து அதற்காக குரல் கொடுத்தல்.

3- حقوق الوالدين

تبرهما، وذلك بالإحسان إليهما قولًا وفعلا بالمال والبدن، وتمتثل أمرهما في غير معصية الله، وفي غير ما فيه ضرر عليك.

## 03. பெற்றோர்களுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்.

அவர்களுக்கு பணிவிடை செய்தல், சொல்லாலும் செயலாலும் பொருளாலும் உதவி செய்தல், அல்லாஹ்வுக்கு மாறு செய்யாத, நமக்கு பாதிப்பில்லாத விடயங்களில் அவர்களுக்குக் கட்டுப்படல்.

4- حقُّ الأولاد

1- التربية؛ وهي تنمية الدين والأخلاق في نفوسهم حتى يكونوا على جانب كبير من ذلك

2- أن ينفق عليهم بالمعروف من غير إسراف ولا تقصير

3- ألا يفضل أحدا منهم على أحد في العطايا والهبات

## 04. பிள்ளைகளுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்.

1. பண்படுத்தல். அதாவது ஒழுக்க ரீதியாகவும் மார்க்க ரீதியாகவும் அவர்களை வளப்படுத்தி ஒரு சிறந்த முழுமனிதனாக மாற்றுதல்.
2. வீண் விரயங்களை தவிர்த்து நல்வழியில் நியாயமான முறையில் அவர்களுக்காக செலவு செய்தல்.
3. அன்பளிப்புகள், நன்கொடைகள் வழங்கும்போது அவர்களுக்கு மத்தியில் பாரபட்சமின்றி நீதியாக நடந்து கொள்ளல்.

5- حقوق الأقارب

أن يصل قريبه بالمعروف؛ ببذل الجاه، والنفع البدني، والنفع المالي بحسب ما تتطلبه قوة القرابة والحاجة.

## 05. உறவுகளுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்.

1. நல்ல முறையில் அழகிய வடிவில் அவர்களுடன் இணைந்து வாழுதல். உறவுமுறை, மற்றும் தேவை ஆகியவற்றை கருத்திற்கொண்டு உடலாலும் பொருளாலும் அவர்களுக்கு உதவி செய்தல்.

**6-** حقّ الزوجين

أَن يعاشر كل منهما الآخر بالمعروف وأن يبذل الحق الواجب له بكل سماحة وسهولة من غير تكرّه لبذله ولا مماطلة.

من حقوق الزوجة على زوجها: أن يقوم بواجب نفقتها من الطعام والشراب والكسوة والمسكن وتوابع ذلك، والعدل بين الزوجات.

من حقوق الزوج على زوجته: أن تطيعه في غير معصية الله، وأن تحفظه في سره وماله، وألا تعمل عملا يضيع عليه كمال الاستمتاع.

## 06. கணவன் மனைவி இருவருக்கும் இடையிலான கடமைகள் உரிமைகள்.

1. இருவரும் ஒருவர் மற்றவருடன் குடும்ப வாழ்க்கையில் நல்ல முறையில் வாழ முயற்சித்தல்.
2. ஒருவர் மற்றவர் மீது உண்டான பொறுப்புக்கள், கடமைகளை எவ்வித ஏமாற்றுதலோ வெறுப்புணர்வோ அன்றி, விட்டுக் கொடுப்புடனும் அழகிய முறையிலும் நிறைவேற்ற முயற்சித்தல்.

## கணவன் மனைவிக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளில் பிரதானமானது.

1. உணவு, உடை, உறையுள் மேலும் இது சார்ந்த அம்சங்கள் ஆகியவற்றை அவசியம் நிறைவேற்றிக் கொடுத்தல்.

2. ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருப்பின் அவர்களுக்கு மத்தியில் நீதியாக நேர்மையாக நடந்து கொள்ளல்.

## கணவனுக்கு மனைவி நிறைவேற்ற வேண்டிய கடமைகளில் பிரதானமானது.

1. பாவமான காரியங்களுக்கு துணை போகாது, ஏனைய அனைத்து விடயங்களிலும் கணவனுக்கு கட்டுப்படல் .
2. அவனது செல்வத்தையும் ரகசியத்தையும் பாதுகாத்தல்.
3. இல்லற வாழ்வுக்கு இடையூறாக அமையும் எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபடாதிரித்தல்.

7. حقوق الولاة والرعية

حقوق الرعية على الولاة: أن يقوموا بالأمانة التي حملهم الله إياها وألزمهم القيام بها من النصح للرعية والسير بها على النهج القويم الكفيل بمصالح الدنيا والآخرة، وذلك باتباع سبيل المؤمنين.

حقوق الولاة على الرعية فهي: النصح لهم فيما يتولاه الإنسان من أمورهم، وتذكيرهم إذا غفلوا، والدعاء لهم إذا مالوا عن الحق، وامتثال أمرهم في غير معصية الله، ومساعدتهم.

## 07. ஆட்சியாளர்கள் பிரஜைகளுக்கிடையிலான உரிமைகள் கடமைகள்.

ஆட்சியாளர்கள் பிரஜைகளுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை பொறுத்தவரைக்கும் அவர்கள் மீது அல்லாஹ் சுமத்தியுள்ள சமூகப் பொறுப்பை, அமானிதத்தை முறையாக நிறைவேற்ற வேண்டும்.

தனது பிரஜைகளை அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மைகளை, அபிவிருத்திகளை ஏற்படுத்தக்கூடிய வழிகளை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். இவை எல்லாவற்றிலும் அல்வாவின் விசுவாசிகளான மூஃமின்கள் சென்ற வழியை பின்பற்றி நடத்தல்.

## பிரஜைகள் ஆட்சியாளர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும்.

ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட பொறுப்புகளில் அவர்களுக்கு விசுவாசமாகவும் நம்பிக்கையாகவும் இருத்தல்.

அவர்களிடம் அலட்சியத்தைக் கண்டால் உபதேசம் செய்தல்.

சத்திய வழியிலிருந்து திசை மாறும் போது அவர்களுக்காக பிரார்த்தித்தல்.

அதேபோன்று அவர்களுக்கு கட்டுப்படும் விடயத்தில் இறைவனுக்கு மாறுசெய்யாத காரியங்களில் கட்டுப்பட்டு, அவர்களுக்கு உதவி ஒத்தாசையாக செயற்படல்.

**8- حق الجيران**

**الجار: هو القريب منك في المنزل، يحسن إليه بما استطاع من المال والجاه والنفع، ويكفّ عنه الأذى القولي والفعلي.**

**1- إن كان قريبا منك في النسب وهو مسلم فله ثلاثة حقوق: حق الجوار، وحق القرابة، وحق الإسلام.**

**2- إن كان مسلما وليس بقريب في النسب فله حقان: حق الجوار، وحق الإسلام**

**3- وكذلك إن كان قريبا وليس مسلما فله حقان: حق الجوار، وحق القرابة**

**4- إن كان بعيدا غير مسلم فله حق واحد: حق الجوار**

## 08. அயல் வீட்டாருக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்.

அயல் வீட்டுக்காரரர் என்பவர் நமது வீட்டிற்கு அருகில் வசிப்பவர், அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளல்.

செயல்களாலும் வார்த்தைகளாலும் எவ்வித தீங்கும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளல்.

1. அயல் வீட்டார் உறவுக்காரராகவும் முஸ்லமாகவும் இருந்தால் மூவகை கடமைகள் அங்கே தொடர்பு படுகின்றன.

ஒன்று அயல் வீட்டார் என்பதும், இரண்டு உறவுக்காரர் என்பதும், மூன்று முஸ்லிம் சகோதரர் என்ற வகையிலுமாகும்.

2. குடும்ப உறவு அல்லாத, முஸ்லிம் சகோதரனாக இருந்தால் அங்கே இரண்டு வகை கடமைகள் தொடர்பு படுகின்றன. ஒன்று அயல் வீட்டுக்காரர், இரண்டு இஸ்லாமிய சகோதரர்.

3. குடும்ப உறவுக்காரராகவும், மாற்று மத சகோதரராகவும் இருத்தால் அங்கே இருவகை கடமைகள் தொடர்பு கொள்கின்றன. ஒன்று அயல் வீட்டுக்காரர் என்ற வகையிலும், இரண்டு உறவுக்காரர் என்ற வகையிலும்.

4. குடும்ப உறவு அற்ற முஸ்லிமல்லாதவராக இருந்தால் அங்கே ஒரேயொரு கடமை தொடர்பு படுகின்றது. அதுதான் அயல் வீட்டுக்காரர் என்ற அடிப்படையிலான கடமையாகும்.

**9-** حقوق المسلمين عموما

منها السلام، وإذا دعاك فأجبه، وإذا استنصحك فانصحه، وإذا عطس فحمد الله فشمّته، وإذا مرض فعده، وإذا مات فاتبعه، وكف الأذى عنه.

حقوق المسلم على المسلم كثيرة، ويمكن أن يكون المعنى الجامع لها هو قوله ﷺ «المسلم أخو المسلم» فإنه متى قام بمقتضى هذه الأخوة اجتهد أن يتحرى له الخير كله، وأن يجتنب كل ما يضره.

## 09. பொதுவாக முஸ்லிம் சகோதரர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள்.

அவையாவன ஸலாத்திற்கு பதில் கூறுதல், விருந்துக்கு அழைத்தால் பதில் அளித்தல், அறிவுரை கேட்டால் அறிவுரை வழங்குதல், தும்மிய பின் அல்லாஹ்வைப் புகழ்ந்தால் அதற்கு பதில் கூறுதல், நோயுற்றால் நோய் விசாரிக்கச் செல்லல், மரணித்தால் ஜனாஸாவில் கலந்து கொள்ளல், அவனுக்கு எவ்வித தீங்கும் இழைக்காதிருத்தல்.

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அதிகம் காணப்படுகின்றன இவை யாவற்றையும் பின்வரும் நபிமொழி சுருக்கமாக குறிப்பிடுகின்றது. ‘‘ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான்’’.

இந்த நபிமொழியில் கூறப்படும் சகோதரத்துவம் பேனப்பட்டால் மற்றவர்களுக்கு நன்மையையே நாடுவோம், எவ்வித தீங்கும் இழைக்கமாட்டோம்.

**10- حق غير المسلمين**

**يجب على ولي أمر المسلمين أن يحكم فيهم بحكم الإسلام في النفس والمال والعرض، وأن يقيم الحدود عليهم فيما يعتقدون تحريمه، ويجب عليه حمايتهم وكف الأذى عنهم .**

**ويجب أن يتميزوا عن المسلمين في اللباس، وألا يظهروا شيئا منكرا في الإسلام، أو شيئا من شعائر دينهم؛ كالناقوس، والصليب.**

## 10. மாற்று மத சகோதரர்களுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்.

முஸ்லிம்களின் ஆட்சியாளராக செயற்படும் ஒருவர் நாட்டில் வாழும் மாற்றுமத சகோதரர்கள் விடயத்தில் நீதியை கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக அவர்கள் உயிர், உடமை, மானம் ஆகிய அம்சங்களில்.

அவர்களும் ஹராம் என்று நம்புகின்ற, தடுக்கப்பட்ட விடயங்களில் அதற்குரிய தண்டனைகளை அமுல்படுத்தல்.

மேலும் அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படுவதுடன் ஆபத்துக்கள் பிரச்சினைகளில் இருந்து அவர்களை பாதுகாத்தல்.

وصلى الله على نبينا محمد وعلى آله وصحبه أجمعين وآخر دعوانا أن الحمد لله رب العالمين.